ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஆர்யதர்மம்.

ஆசாரியாள் அநுக்ரஹம் பெறாதவனுக்கு ஆர்யதர்மம் பயனேயளிக்காது. ஆசாரியாளுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரனாகாவிடில் தனது உண்மையான ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளமாட்டான். அவர்களிடமிருந்து தத்துவசிரவணம் செய்யாவிடில் அக்ஞான இருளை நீக்க மெய்க்ஞானப் பிரகாசத்தைப் பெறமாட்டான். அந்த ஞானப்பிரகாசமில்லாவிடில் ஸம்ஸாரமென்னும் பாழுங்கிணற்றிலிருந்து கரையேறப்போவதில்லை. அதனாற்றான் பெரியோர்கள் ஸதாசாரியனை ஸேவிக்கிறார்கள். "ஆசாரியனுள்ள புருஷன்தான் அறிவடைவான்" என்று சுருதியும் கூறுகின்றது. இது யுக்திக்குமொத்ததே. முன்பின் கண்டறியாத காட்டில் கண்டதிக்கெல்லாம் வழிகள் காணப்படும்பொழுது எவ்வளவு புத்திசாலியாயிருந்தாலும், தனக்கிஷ்டப்பட்டவிடத்தைஅடையத்தகுந்த வழியைத் தானாகவே தெரிந்துகொள்ள முடியாதென்பது எல்லோருக்கும் அனுபவத்திற்கு வந்த விஷயம். ஸம்ஸாரமென்னும் கடுங்கானகத்தில் கண்டபடி திரிகின்ற காமுகர்களுக்குக் கண்டவிடமெல்லாம் கானல் நீர்போல் காமவிஷயங்காணப்படும்பொழுது அவ்வழிசென்று அவைகளையடைய விரும்பிச் செல்லுகின்றவன் வீணாயலைந்து எத்தமரம்போல் கீழும் மேலுமாகவோ, செக்குமாடுபோல் சென்றவிடத்தையே சுற்றிச்சுற்றியோ வந்து கஷ்டப்படுவானே அல்லாது இஷ்டப்பட்ட சுகத்தைப் பெறப்போவதில்லை. பௌத்த சார்வாக சமணர் முதலிய பல போலிவழிகாட்டிகள் கூட்டம் சேர்க்கத் தங்கள் வழியிலிழுத்து தாங்கள் கெட்டதுபோதாதென்று மற்றவர்களையும் கெடுக்கக் காத்திருக்கும்பொழுது நல்வழிகாட்ட நல்லபுத்தி எப்படிவரும். ஸதாசாரியன் கருணைகூர்ந்து உபதேசித்தாலன்றி கஷ்டத்தை விட்டு விலகுவது அஸாத்தியமாகும். பாக்கிய ஹீனர்கள் பரமாசாரியாளையும் பழிப்பார்கள். ஆயினும் பாக்கியவான்களுக்குப் பாமரப்போலி கூட்டமின்னதென்றும், பாரமார்த்திகப்பெரியார் இன்னாரென்றும் புலப்படாமல் போகாது. அத்தகைய பாக்கியம் பரிபக்குவப்பட்ட பிராணிக்குத்தான் அப்பெரியார் பார்வையில் படுவார். அவரைக்கண்டதும் அடிபணிந்து இருகரங் கூப்பி அஞ்சலிசெய்து ஆனந்தக்கண்ணீர் பெருக அன்னாரிடம் தன் கஷ்டகதியைத் தொலைத்துக் கவலையற்றுக் கரையேறும் வழியைக் கேழ்க்கவேண்டும். அப்படிக்கேழ்க்கும் ஸாதுவான சிஷ்யனுக்கு சீக்கிரத்தில் க்ஷேமம் கிடைக்கும் வழியை அம்மஹான் உபதேசிப்பார். அந்த உபதேசப்படி நடப்பவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் யாதொரு குறையும்வராது. வேண்டிய புருஷார்த்தங்கள் கிடைக்கும். கடைசியில் சாசுவத சுகஸ்வரூபமான மோக்ஷஸாம்ராஜ்யமும் கிடைக்கும். ஆகையால் ஆஸ்திகர்கள் ஆசாரியாளையாசிரயித்து அகில சிரேயஸ்ஸையும் அடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

பிரமோத-௵ சித்திரை-மீ உகூஉ

ஆசார்ய ஜயந்தி.

ஸ்ரீ மதாசார்ய ஜயந்தி மஹோற்சவம் நம் ஆர்யநாட்டில் வருஷந்தோறும் ஸ்ரீஜயந்தி முதலிய விருதம்போல் அநுஷ்டிக்கப் பட்டுவருவது யாவருமறிந்த விஷயமே. இவ்வருஷத்தில் திண்டிவனம் கிராமவாசிகளான மகாஜனங்களின் பாக்கியப்பெருக்கால் ஷை மஹோத்ஸவம் ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீமதாசார்ய பாதாளுடைய ஸ்ரீமஹாஸன்னிதானத்தில் நடைபெறும் புண்ணியம் அந்தக் கிராமத்தாருக்குக் கிடைத்தது. அந்த மஹோத்ஸவம் வைசாகசுத்தப் பிரதமை முதலாரம்பிக்கப் பட்டு பஞ்சமி பரியந்தம் 5நாள் நடத்தப்பட்டது. பிரதிதினமும் காலையில் ஸ்ரீபகவத்பாதாசார்ய விக்ரஹத்திற்கு அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்தியம் முதலிய ஆராதனமும் பாஷ்ய பாராயணாதிகளும் மாலையில் ஸ்ரீமதாசார்யபிம்பத்தை சின்னச்சிவிகையில் வைத்து அலங்கரித்து, வெண்கொடை வெண்சாமரம் முதலிய ஸகல ஸன்னாகங்களுடன் யானையின்மேல் எழுந்தருளச்செய்து வீதிப்பிரதக்ஷணமும் விமரிசையாய் நடத்தப்பட்டது. பஞ்சமி யன்று காலையில் விசேஷ ஆராதனமும், பாஷ்யப்ரவசனமும் மாலையில் தினம்போல் விசேஷவைபவத்துடன் வீதிப்பிரதக்ஷிணம்வேத பாராயணத்துடனும் சென்னையிலிருந்து வந்திருந்த பக்தகோடிகளின் பஜனை கோஷ்டியுடனும், ஸ்ரீமதாசார்யபாதாள் பாதசாரமாகவே ஸ்ரீமதாசார்யபிம்பத்திற்கு அபிமுகமாக விஜயம் செய்த காக்ஷியுடனும் நடந்ததைப் பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும். அஸ்தமனத்திற்குப் பிறகு பண்டிதர்களின் பிரஸங்கம் நடந்தபின் மஹாஜனங்களின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீபகவத்பாதாசார்யாள் அருளிச்செய்த உபதேச பஞ்சகத்தின் ஸாராம்சம் ஸ்ரீமதாசார்யாள் முககமலத்தால் அமிருதப் பிரவாஹம்போல் பெருகவிடப்

பட்டது. யாவருக்கும் பரமானந்தத்தையளித்தது. நடாதூர், ஸ்ரீமான் ஆசாரியாவர்கள் செய்துவரும் ஸநாதனதர்மோபன்யாஸங்களால் வர்ணாசிரமிகள் ஆனந்தப்படுவதை அறிந்து ஸ்ரீமஹாஸன்னிதானத்தில் ஷெடி ஆசாரியாரவர்களுக்கு "வாங்முகரத்தின கோசம்" என்ற பிருதமும் ஒரு பதக்கமும் பரிசளிக்கப்பட்டது. பிறகு நைவேத்திய தீபாராதனாதிகளும் நடந்து, பானகபூஜையும் பிரஸாத விநியோகமும் செய்யப்பட்டுத் தாம்பூலம் கொடுத்தபின் இனிது கூட்டம் கலைந்தது. மற்றவிடங்களிலும் இந்த மஹோத்ஸவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டாலும் ஸ்ரீமதாசார்யாளுடைய திவ்யஸன்னிதானம் விஜயமாயிருந்த பாக்கியம் பெற்ற திண்டிவனத்துமஹாஜனங்களின்பெருமைபுகழத்தக்கதே. இந்த மஹோத்ஸவம் சிலவிடத்தில் பிரதமை முதல் பஞ்சமி வரையிலும், சிலவிடத்தில் பஞ்சமிமுதல் 5-நாளிலும், சிலவிடத்தில் 10-நாளிலும் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ பகவத்பாதாளுடைய ஜயந்தி மஹோத்ஸவம் ஸ்ரீ காமாக்ஷியம்பாளுடைய ஆலயத்தில் பஞ்சமியன்று முதல் ஆரம்பிக்கப்பட்டு வழக்கம் போல், வேதபாராயணம், பாஷ்யபாராயணம், இவைகளுடன் நடத்தப்பட்டு வருகிறது இதுபோலவே ஒவ்வொரு கிராமங்களிலும் இவ்வுற்சவத்தை நடத்தி பண்டிதர்கள் முகமாக ஸ்ரீமதாசாரியாளுடைய திவ்யசரித்திரத்தை சிரவணம்செய்து, அவர்களால் கண்டிக்கப்பட்ட துர்மதங்களில் மனதைச்செலுத்தாமல், அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆறுமதங்களையவலம்பித்து அதிற் கூறியபடி கர்மயோகம், பக்தியோகம் இவைகளைச்செய்து சித்தசுத்தியடைந்து பாவைராக்கியம் பெற்று பாஷ்யத்தைப்படித்து தத்துவநிச்சயத்தையடைந்து ஞானயோகியாகி பழையபுண்ணியபாபமூட்டைகளைத் தொலைத்து புதிதாக வேறொரு மூட்டை சேராதபடி ஜாக்கிரதையாயிருந்து பிராரப்தம் முடியும்வரை ஸமாதிபலத்தால் ஜீவன்முக்திசுகம்பெற்று பிராரப்தம்முடிந்தபின்விதேஹகைவல்யம் பெற்று அகண்டபரிபூர்ண ஸச்சிதானந்த வடிவமாய் விளங்கும் பாக்கியம்பெற்ற புண்யவான்கள் ஜன்மஸாபல்யத்தை அடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்.

ஓர் சந்தேகம்.

ஒரு பிரும்மசாரிக்கு ஆசௌசமோ அல்லது விருத்தியோ ஏற்படுமானால் ஷை பிரும்மசாரிக்கு ஸூதகம் உண்டு என்றும் இல்லையென்றும் சிலர் அனுஷ்டித்து வருகிறார்கள்.

ஷை ஸூதகம் அனுஷ்டிக்கவேணுமென்ற பிரம்மசாரி பிரம்மசர்யத்திலிருந்து தவறினவனும் ஸமாவர்த்தனாதிகள் செய்யாதவனும் இருக்கிறான். ஷை பிரும்மசாரி விரதம் அனுஷ்டிக்கவேணுமா? வேண்டாமாவென்ற விஷயத்தை அறியவிரும்புகிறோம். பிரும்மசாரி கல்யாணம் செய்யாமலே இருந்தால் ஞாதியாசௌசம் வந்தால் ஆசௌசம் உண்டா இல்லையா? 50-வயது பரியந்தம் விவாஹமாகாமலிருந்தால் அவன் பிரும்மசாரியா? பிரும்மசாரியாசிரமம் எத்தனை வயது பரியந்தம்? சாஸ்திரோக்தமாய்விதிக்கப்பட்ட பிரும்மசரியாசிரம விதிப்பிரகாரம் அனுஷ்டிக்காமல் அவனிஷ்டம்போல் தமாஷாய் இருக்கக்கூடியவன் பிரும்மசர்ய ஆச்ரமத்தில் இருக்கிறவனா? பிரும்மசாரியா. விவாகம்வேண்டாமென்று இருக்கக்கூடிய பிரும்மசாரி ஸமாவர்த்தனம் செய்துகொண்டிருக்கலாமென்று சாஸ்திரம் இருக்கிறதே. ஸமாவர்த்தனம் இத்தனை வயதுக்குமேல் இத்தனை வயதுக்குள் செய்து தீரவேண்டுமென்ற நிபந்தனை ஏதாவது இருக்கின்றதா? இவைகளை ஆராய்ந்து பிரும்மசாரிக்கு இத்தனை வயதுக்குமேலானால் ஸூதகம் உண்டு அல்லது இல்லை என்ற விஷயத்தை தயவுசெய்து தங்கள் ஆர்யதர்ம மூலமாய் பிரசுரம் செய்து எங்கள் சந்தேஹத்தை நிவர்த்திக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சங்கராராமசுப்ரமணியசாஸ்திரிகள்,

கீழக்கிராமம் இலத்தூர்.

'ஸநாதன தர்மம்' 3

Socialetiquette.

சமூகசம்பிரதாய மரியாதை முறை.

நம் வாலிபர்களின் நடையுடை பாவனைகள் அநியாயமாய் சீர்கெட்டு வருவதை நாம் பார்த்துக்கொண்டு வருகிறோம். ஒவ்வொரு ஜனஸமூஹத்திலும் தாய் தகப்பன்மாரிடத்தில் பிள்ளைகளும் பெரியோர்களிடத்தில் சிறுவர்களும் அவ்விதமே கோஷ்டிக

ளிலும் நடந்துகொள்ளவேண்டிய சம்பிரதாய மரியாதைகள் பல உண்டு. அவைகளுக்குச் சட்டமில்லையென்பதும் அநுஷ்டானம்தான் பிராமாண்யமென்பதும் அந்தப்படி அந்தந்த ச்மூகத்தைச் சேர்ந்தவர்கள் நடக்கவேண்டியதென்பதும் யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய சங்கதிகள். தற்காலத்தில் வயிற்றுப்பிழைப்புக்காக ஆங்கிலப்படிப்பை கைக்கொண்ட நம் வாலிபர்கள் அவரவர்கள் வீட்டில் தாய் தந்தையர்களிடமும் மூத்தோர்களிடமும் கோஷ்டிகளிலும் எப்படி நடக்கிறார்கள் என்பதையும் அதிகாரிகளிடம் போகும்போதும் ஆங்கிலேயர் முதலியவர்களின் கூட்டங்களிலும் அவைபோன்ற இதர சந்தர்ப்பங்களிலும் எப்படி நடிக்கிறார்கள் என்பதையும் சற்று கவனியுங்கள்.

மேல்நாட்டார் முன்னிலையிலும் நாற்காலி முதலிய ஆஸனங்களில் உட்காரும்படியான கூட்டங்களில் கலக்கும்போதும் சுய மரியாதையைவிட்டு எப்படிமேல்நாட்டு சம்பிரதாயங்களை சிறிதும் விடாமல் கைக்கொள்ளுகிறார்களோ அப்படிப்பட்ட சிரத்தையில் கொஞ்சங்கூட நம் கிரஹங்களிலிருக்கும்போதும் கோஷ்டிகளில் வரும்போதும் காணப்படவில்லையே! வீடுகளிலிருக்கும்காலத்திலும் பெரியோர் முன்னிலையிலும் கோஷ்டிகளிலும் வருங்காலத்திலும் அவரவர்கள் ஆசாரப்படி நெற்றிக்கிட்டுக்கொள்ள வேண்டியதும், ஆச்ரமத்துக்குத் தக்கபடி பஞ்சகச்சாதிகளைக் கட்டிக்கொள்ளவேண்டியதும், சிகைகள் வைத்திருப்பதும் பின்னுமுள்ள வழக்கபழக்கங்களுக்கும் ஆசாரங்களுக்கும் விரோதமாய் நடவாமலிருப்பதும் சமூகசம்ப்ரதாய மரியாதைகளல்லவா? இதற்கு மாறுபாடாய் நடக்கலாகுமா? ஐரோப்பிய கோஷ்டியில் ஒரு ஐரோப்பியர் தலைமயிர் வளர்த்துக்கொண்டாவது வேஷ்டிகட்டி தலைப்பாவைத்துக் கொண்டாவது நெற்றிக்கிட்டுக்கொண்டாவது வேறு எவ்வித பழக்கத்துக்கு விரோதமாகவாவது போவாரா? போனால் அவரைச்சேர்ப்பார்களா? மதிப்பார்களா?

ஆதலால் நம் வாலிபர்கள் இதைகொஞ்சம்ஆழ்ந்து கவனித்து சுயமரியாதையை இழக்காமல் சமூகசம்பிரதாய மரியாதைகளை அனுஷ்டிக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

தஞ்சை
பிரமோதூத-ஸ்ரீ
சித்திரை-மீ

தஞ்சைஜில்லா பிராமணர்
ஸநாதனதர்ம சம்ரக்ஷண சபை.

ஓர் வேண்டுகோள்.

வைகாநஸர்களைப்பற்றிய ஸநாதனதர்மதத்துவம்.

சுருதிகளையும் அவைகளின் அர்த்தமான ஸ்மிருதிகளையும் திரிகாலக்ஞரான மஹரிஷிகள் பிரயோகத்தின் ஸௌகரியத்திற்காக ஸூத்திரங்களாக நிர்மித்தார்கள். அந்த ஸூத்திரங்கள் **'बोधायनम्, आपस्तम्बम्, सत्याषाढम्, द्राह्यायनम्, आगस्त्यम्, शाकल्यम्, आश्वलायनम्, शाम्भवीयम्, कात्यायनम्, इतिनवानि पूर्वसूत्राणि । वैखानसम्, शौनकीयम्, भारद्वाजम्, आग्निवेश्यम्, जैमिनीयम्, माधुन्यम्, माध्यन्दिनम्, कौण्डिन्यम्, कौषीतकमिति, नवान्यपरसूत्राणि, अष्टादशसंख्यानि अष्टादशसंख्याऽशारीराः "** என்று வைத்தியநாததீக்ஷிதீய வர்ணாசிரமகாண்டத்தில் 35வது பக்கம் 3வது வரியில் அக்கினிவேச மஹரிஷியினால் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஸூத்திரங்களில் அனுஷ்டிக்கப்படாத ஸூத்திரங்கள் சில உண்டென்றும் இந்தப்பதினெட்டைத்தவிர அனுஷ்டிக்கப்படும் ஸூத்திரங்கள் சில உண்டென்றும் கீழே வியாக்கியானத்தில் காணப்படுகிறது. ஷை ஸூத்திரங்களை அனுஷ்டிக்கும்பிராமணர்களுக்குள் ஒவ்வொரு ஸூத்திரத்திலும் அநேகங் கோத்திரிகள் இருக்கிறார்கள். அந்த கோத்திரிகளுக்குள் ஸமான கோத்திரமுள்ளவன் எந்த ஸூத்திரியாய் இருந்தாலும் ஸஹோதரனாகவே ஆகிறான். ஏனெனில், கோத்திரமென்பது வம்சந்தான் என்று போதாயனர் முதலிய மஹரிஷிகள் அபிப்பிராயமென்று ஷை வர்ணாச்ரமகாண்டத்திலேயே காணப்படுகிறது. ஆனதால் தற்காலம்ஏற்பட்டிருக்கும் உட்பிரிவுகள்வெகுகாலத்திற்குப்பிறகு பல ஸௌகரியத்திற்காகப் பிந்தியவர்களால் ஏற்படுத்தப்பட்டதுகளே தவிர வேறு எக்காரணத்தைப்பற்றியும் ஏற்பட்டவைகளல்ல. ஷை உட்பிரிவுகளில் போஜனாதிகளாலோ, அல்லது கொண்டு கொடுத்து ஸம்பந்தம் செய்துகொள்வதாலோ அல்பதோஷமாவது உண்டென்று தர்மசாஸ்திரங்களில் யாதொரு வாக்கியத்தையும் நாம் அறியவில்லை. அதனாலேயே இந்த உட்பிரிவுகள் மஹரிஷிகளின் காலத்துக்கு வெகு பிற்காலத்தியதென்று நாம் தீர்மானிக்கக்கூடியதாயிருக்கிறது. இப்படியிருக்க ஒவ்வொரு ஸூத்திரியும் தன் ஸூத்திரிகளுக்குள் தான் விவாஹாதிகளைச் செய்துகொள்ளவேண்டும். அன்னிய ஸூத்திரத்தில் விவாஹம் செய்து

கொள்ளக்கூடாதென்று கலி மஹர்ஷிகளின் நிர்ப்பந்தத்தால் வைகாசஸம் என்றும் ஸூத்திரானுஷ்டானம் செய்பவர்கள் இவ்வுலகிலும் பெரும் துன்பத்தையனுபவித்து படுநாகத்துக்காளாகக் கூடிய பிராயச்சித்தமேயில்லாத அநேகம் பாபத்துக்குள்ளாகிறார்கள். ஒரு விஷயத்தையுமறியாத அக்கூட்டத்தாருள் பலர் சில மிருகங்களைப்போல் ஒருவர்பின் ஒருவர்போய் குடும்பநாசத்தை அடைகிறார்கள். மஹர்ஷிகளின் சாபம் வியர்த்தமாகுமா? ஷை வை-தீ-வ-கா-429 பக்கம் 2வது வரிமுதல் பெண்களை விற்பதைப் பற்றி மஹாதோஷத்தைக்கூறி ஷைபிரகாணத்திலேயே ஆண்களை விற்பதையும் 12வது வரியில்—

यम:— योमनुष्यं हि विक्रीय यत्किञ्चिद्धनमृच्छति ।
तस्य मूत्रं पुरीषं च स परत्रोपजीवति ॥

என்று முதல் எவன்மனுஷ்யனையோ பெண்ணையோ விற்று அல்ப மானதனத்தையாவது அடைவானோ அவன் 7 குலத்தோடு நாகத்தில்வசிக்கிறான்என்றும் அப்பெண்பிள்ளையின்மலத்தைத்தின்கிறான் என்றும், அது ஆஸுரவிவாஹமென்றும், குலங்களை நசிக்கச் செய்யுமென்றும் அப்படி ஒரு சமயத்தில் ஷை ஆஸுரவிவாஹத்தில் ஸந்ததியுண்டானாலும் அல்பாயுசுக்களாய் துராசாரர்களாய் மூடர்களாயுமிருப்பார்கள். ஷை வம்சங்கள் விருத்தியடையவே மாட்டாதுகளென்றும் நூற்றுக்கணக்கான வசனங்களால் சபித்திருக்கிறார்களல்லவா? திரிகாலக்ஞர்களான மஹர்ஷிகள். இந்தப்பெண்கள் பிள்ளைகள் விற்பனையினால்தான் பிராம்மணக்கூட்டம் வெகு சிரமத்தையடைந்து க்ஷீணதசையை அடைந்துவிட்டது. பட்டபிறகு பாப்பானுக்கு என்று கூட இவர்களுக்கு இன்னும் ஸரியான நிலை உண்டாகவில்லை. வேதசாஸ்திரகணங்களால் தடுக்கப்பட்டவைகள் ஸம்பிரதாயமாம். ஒரு வேதஸ்மிருதி வசனத்தாலும் ஈசுவராவதாரபூதரான ஆசாரிய சங்கர ராமானுஜபரம்பரையிலுள்ளபெரியோர்களாலும்லோகத்துக்கு சந்திரசூர்யராளாய்ப் பிரகாசித்த மன்னார்குடி திருவிசலூர் பெரியவாளாலும் இன்னும் அனேகம் வித்வான்களாலும்மஹர்ஷிகளின் காலமுதல் அங்கீகரிக்கப்பட்டுக் கொஞ்சம்கூடத் தடுக்கப்படாமலிருக்கிற அன்னியஸூத்திரவிவாஹாதிகள் ஸம்பிரதாயமில்லையாம். ஷை वै. गृ. सूत्र.6வது பிரச்னம் 12வது கண்டத்தில் ब्राह्मणः ब्राह्मणीसू......वरयेत् என்று சொல்லி இவ்வாசுரவிவாஹத்தைப் பலவிதம் தூஷித்து ஷை விவா

ஹிகளுக்கு சந்திராயணம் முதலிய பிராயச்சித்தமும் கூறப்பட்டிருக்கிறது. ஷிகூட்டத்தில் பெண்ணுக்குமேல்கலியாணத்துக்குத் தகுதியான ஆண் 3 பங்கிருப்பதால் பெண்களின் விலை தற்காலம் முதல் விவாஹக்காரனுக்கு ரூ. 2000மும் 2வது விவாஹிக்கு 3000 முதல் 5000 வரையிலும் ஏற்பட்டுவிட்டது ஷிகூட்டத்தில் வியாபகனை ஏன் அன்யஸூத்திர விவாஹம் செய்யக்கூடாது என்று கேட்டோமானால் கோபிக்கிறார்கள். கேள்விக்கு கோபம் சமாதானமாகுமா? கேள்விக்கு ஸமாதானம் ரிஷிப்ரோக்தமான வசனம்.

ஆகையால் அர்த்தமில்லாத ஸம்பிரதாய சப்தவாதிகள் ஹவ்யகவ்யாதிகளில் பெரியகூட்டத்தை வஹிக்கமுடியாதென்று கொஞ்சங்கூட்டத்தில் ஸம்பந்தாதிகளைச் செய்துகொண்டிருந்த பெரியவாள்அபிப்பிராயத்தை நன்றாய் விசாரித்து தோஷமில்லாத காரியங்களை விருத்திசெய்யவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் அன்னியஸூத்திரங்களில் உள்ள கோத்திரங்களையுமிவாள் தரிக்கக்கூடாது. பொதுவாய்ச்சொல்லப்பட்டிருக்கிற பிராம்மண சப்தத்தையும் தான் எப்படி தரிக்கமுடியும். ஆகையால் பிடிவாதத்தை விட்டுப் இதை நன்றாய் விசாரிக்கவேண்டுமென்றும் நான் எழுதினேன். எவ்விதப் பிழையையும் பெரியோர்கள் பொறுப்பார்கள்.

வித்வான், கி. குப்புஸாமி பட்டாசார்யன்

அஹிம்ஸாதர்மத்தின் மேன்மை.

இத்தலையங்கத்துடன் நமது ஆர்யதர்மத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்ற யான் எனது அபிப்ராயத்தையும் தெரிவிக்க மனவெழுச்சியுள்ளவனாயிருக்கிறேன்.

உள்ளதை உள்ளதெனச் சொல்வதுமாத்திரம் ஸத்யமொழியாகாது. சிற்சில ஸந்தர்ப்பங்களில் அஸத்யமே தலைகாத்திருக்கிறதென நிரூபிக்கப் பாரதத்தில் பல சரித்திரங்களுண்டு. ஓர் பொய்யை உரைப்பதினால் ஸஜ்ஜனங்களுக்கு நன்மைவிளையுமானால் அதுவே ஸத்யமாகும். ஸத்யத்தைச்சொல்வதால் நல்லவர்களுக்கு தீங்கு நேரிடுமாயின் அது அஸத்யமாகி நாகம் முதலிய அனர்த்தங்களை உண்டுபண்ணும். ஆகவே (யத் ஸதாம் ஹிதமத்யந்தம்

தத் ஸத்யமிதி கீர்த்திதம்.) ஸஜ்ஜனர்களுக்கு எது ஹிதத்தை தருவதோ அதுவே ஸத்யமெனப்படும். இத்தர்மஸூக்ஷ்மத்தை அறிந்த சீதாதேவியும் 'உன்னுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த வானரம் யாது?' என இராக்ஷஸிகளால் வினவப்பட்டபொழுது உண்மையைத் தெரிவிக்காமல் 'பாம்பின்கால் பாம்புக்குத்தான் தெரியும்' என்றனள்.

இம்மாதிரியே ஓர் பிராணியை ஹிம்ஸிக்காமலிருப்பதுதான் அஹிம்ஸையல்ல. சிற்சில ஸந்தர்ப்பங்களில் அதாவது வேதம் ஹிம்ஸை செய்யவேண்டும் என்று விதித்திருக்கும் இடங்களில் ஹிம்ஸையே அஹிம்ஸையாகி பாபத்தைத் தாரமலிருப்பதுந்தவிர ஸ்வர்க்காதி பலன்களையும் தந்தருளும். ஆகவே வாராஹபுராணத்தில்,

हिंसा त्ववैदिका या तु तयानर्थो ध्रुवं भवेत् ।
वेदोक्तया हिंसया तु नैवानर्थः कथंचन ॥

வேதத்தில் விதிக்கப்படாதஹிம்ஸையைச் செய்யின் நாகாதி அனர்த்தங்கள் நிச்சயமாய்ஸம்பவிக்கும். ஆனால் வேதவிஹிதமான ஹிம்ஸையைச் செய்தால் ஒரு பொழுதும் அனர்த்தம் நேரிடாது—எனக்

கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் வேதவிஹிதமான யாகம் ஹிம்ஸாரூபமல்ல. தவிரவும் 'யாகம் ஸத்கர்மங்களினிடையே சிறந்தது' என கௌபவன சுருதியில் சிலாகிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் M. N. சுப்ரமணியசாஸ்திரிகள் கூறியபடியே அசுத்தமிதி சேன்ன சப்தாத் (3—1—27) என்ற ஸூத்திரத்திலும் யாகம் ஹிம்ஸாரூபம் அல்லவெனச் சமர்த்தனம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு வேதவிஹிதமாயும் அதீந்திரியமுமான யாகவிஷயமாக, யாகம்— பாபசாதனமானது— ஹிம்ஸையாயிருப்பதால்—பிராம்மண ஹிம்ஸையைப்போல்— என்று அனுமானம் செய்தால் அவ்வனுமானம் நிஷித்தத்வம் (வேதத்தினுல் தடுக்கப்பட்டிருத்தல்) என்ற உபாதியால் பீடிக்கப்பட்டு துஷ்டமாய்விடுமே தவிர யாகம் பாபஸாதனமென்று ஸாதிக்கமாளாது. இன்னும் மதாசார்யர்களும் நாம் யாகம் முதலிய ச்ரௌதகர்மங்களை எக்காலும் அனுஷ்டித்து வரவேண்டுமென்றே வழிகாட்டியிருக்கின்றனர். உதாரணமாக ஸ்ரீமத்வாசாரியார் தம் குருவின் புத்திரனைக்கொண்டு ஓர்

ஸோமயாகத்தை நடப்பிவித்துத் தமது தம்பியான ஸ்ரீவிஷ்ணு தீர்த்தர் என்பவரை அந்த யாகத்தில் ஹௌத்ரம் என்னும் பிரயோகத்தை நடத்தும்படிச் செய்திருக்கிறார் என மத்வவிஜயம் என்ற நூலில் காணலாம். ஆகவே யாகத்தை இகழ்ந்து கூறுவது சாஸ்திரத்துக்கும் சிஷ்டாசாரத்திற்கும் விருத்தமாகும் என்பதற்கையமில்லை.

இது நிற்க, நாகரீகம் முற்றியிருக்கும் இக்காலங்களில் — யாகம் என்ற வியாஜத்தால் பிராம்மணர்கள் மாமிசம் புசிக்கத் தலைப்பட்டுவிட்டனர் எனச் சுயமரியாதைக்காரர்கள் ஏளனம் செய்யும் இக்காலங்களில் — ஸாக்ஷாத் பசுவையே கொண்டு யாகம் செய்வது உசிதமுமல்ல; பார்ப்பதற்கும் கொடூரமாயும் விகாரமாயும் இருக்கிறது. இக்குறையை ஒருவாறு நீக்கவே நாம் ஸாக்ஷாத்பசுவை விலக்கிப் பிஷ்டபசுவைக்கொண்டு (அதாவது அரிசிமாவினுல் செய்யப்பட்ட பசுவைக்கொண்டு) யாகம் செய்வது அவசியமாகும். ஆனால் பிறர்களின் சொல்லுக்காக நமது ஸநாதன தர்மங்களைத் திருத்திக்கொள்வதாவெனின் பிஷ்டபசுவை உபயோகிப்பதில் சுருதி, யுக்தி, அனுபவம், சிஷ்டாசாரம்முதலியவைகள் இருக்கின்றனவாகையால் நமது வர்ணாசிரமதர்மங்களைக் காலத்திற்கேற்ப திருத்திக்கொண்டதாயுமாகவில்லை.

1. ஐதரேயப் பிராம்மணம் 2-ம் பஞ்சிகை, 8-ம் கண்டத்தில் புருஷம் வை தேவா: பசுமாலபந்த முதற்கொண்டு ய ஏவம் வேத வரையிலுள்ள வாக்கியங்களில் கூறப்பட்டிருப்பதாவது:—

"முற்காலத்தில் தேவர்கள் மனிதனைப்பசுவாக்கி யக்ஞம் செய்ய முயற்சித்தனர். அப்போது யாகத்திற்குரிய ஹவிர்ப்பாகம் மனிதனைவிட்டுக் குதிரையை அடைந்தது. உடனே தேவர்கள் மனிதனைவெறுத்துக் குதிரையைப் பசுவாக்கிக்கொண்டு வந்தனர். பிறகு அந்த ஹவிர்ப்பாகம் குதிரையைவிட்டுப்பசுவிடம் வந்தது. நாளடைவில் பசுவிடமிருந்து செம்மறிஆட்டினிடமும் பிறகு வெள்ளாட்டினிடமும் பிரவேசித்து வெகுகாலம் அங்கேயேதங்கி இருந்தது. ஆதலால் சிஷ்டர்கள் வெள்ளாட்டையே பசுவாக்கிக் கொண்டே வந்தனர். வெகு காலம் கழிந்தவுடன் ஹவிர்ப்பாகம் வெள்ளாட்டை விட்டுப் பூமியின்கண் இறங்கியது. தேவர்கள் பூமியைத்தோடாவே அது நெற்பயிரில் புகுந்து அங்கேயே இன்

றைக்கும் நிலைபெற்றிருக்கிறது. ஆகையால் நெல்லின் எல்லா நிலைகளும் (அரிசி, அரிசிமாவு முதலியவை) ஹவிஸ்ஸுக்குத் தகுதியானவை என்று கருதி தேவர்கள் அவற்றையே பசுவாகக் கொள்கின்றனர்."

இதனால் ஸாக்ஷாத்பசுவைக்கொண்டு யாகம் செய்தால் அதனிடம் ஹவிர்ப்பாகம் இல்லாததால் பிரயோசனமற்றதென்றும் பிஷ்டபசுவை உபயோகித்தால் ஸார்த்தகமென்றும் தெரியவருகிறது.

2. மேற்கண்ட ஐதரேயப் பிராம்மணம் 9-கண்டமும் ஸ வா ஏஷ பசு: முதற்கொண்டு புரோடாச ஸத்ரம் லோக்கியம் வரையிலுள்ள வாக்கியங்களால் நெல்லின் எல்லா நிலைகளும் பசுவுக்குச் சமானமானவையே எனத்தெரிவிக்கின்றன. நெற்பயிரைச் சேர்ந்தவைக்கோல் பசுவின் ரோமத்திற்குச் சமானம் என்றும் நெல்லின் உமி பசுவின் தோலுக்கு ஒப்பானது என்றும் தவிடு பசுவின் இரத்தத்திற்குச் சமானம் என்றும் மாவில்சரியாய் அரைபடாமல் கடினமாய்நின்ற பாகம் பசுவின் எலும்புக்குச்சமானம் என்றும் காண்க.

3. மனுஸ்மிருதி 5-அத்தியாயம் 37-ம் சுலோகம்

कुर्यात् घृतपशुं संगे कुर्यात् पिष्टपशुं तथा ।
नत्वैव तु वृथा हन्तुं पशुमिच्छेत्कदाचन ॥

நெய்யால் செய்யப்பட்ட பசுவையாவது, அரிசிமாவால் செய்யப்பட்ட பிஷ்டபசுவையாவது உபயோகிக்கவேண்டும். பிரத்யக்ஷ பசுவை தேவதோத்தேசமில்லாமல் ஒருபோதும் வீணாகக்கொல்ல விரும்பலாகாது. என மனு கூறியிருக்கிறார். கௌணாதிகாரியின் விஷயமாக இச்சுலோகம் இருப்பதானாலும் இக்கலியிலுள்ளயாவரும் கௌணாதிகாரிகளே யாவார்கள் மேலும் மனு எதைச் சொல்லியிருக்கிறாரோ அது சிறந்த ஔஷதமாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

4. ஸ்ரீ வேதாந்த தேசிகரும், உபரிசரவஸு ராஜா முதலிய மஹான்கள் பிஷ்டபசுவை உபயோகித்திருப்பதாய் பகவத்கீதை 10-ம் அத்தியாயம் 25-ம் சுலோகத்தின் வியாக்கியானவசாத்தில் தாத்பர்ய சந்திரிகையில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியுள்ளார்.

5. தைத்திரீயஸம்ஹிதை 3ம் காண்டம், முதல் பிரச்னம், 4ம் அநுவாகத்தில்,

सुवर्ग याहि पतिभिः देवयानैरोषधीषु प्रतितिष्ठाशरीरैः ॥

யூபஸ்தம்பத்தில் கட்டப்பட்டிருக்கும் பசுவைப்பார்த்துச் சொல்லுமிடத்து 'ஓ பசுவே! நீ தேவர்கள் போகும் வழியுடன் ஸ்வர்க்கத்திற்குச் செல்வாயாக. உனது சரீரத்தால் ஒஷதிகளான நெல் தானியத்தில் நீ நின்றிருப்பாயாக' என்று யாகப்பசு நெல்லில் (அதன் நிலைகளிலும்) ஸர்ந்நித்யமுள்ளது எனத்தெரிகிறது.

6. இன்னும் இவ்விஷயமாய் பல பிரமாணவசனங்களையும் ஸ்ரீமத்வசித்தாந்தப் பிரதிஷ்டாபகராயும் ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதரின் உயிர்த்தோழராயும் இருந்த ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளால் அருளிச்செய்யப்பட்ட பிஷ்டபசுமீமாம்ஸை என்றநூலில் காணலாம்.

இவ்வாறாக மேற்கூறப்பட்டபடி பிஷ்டபசுவைக்கொண்டு நம்மவர்கள் யாகம் செய்துவந்தால் பார்ப்பதற்கு விகாரமில்லாமலும், பிறர்கள் நம்மை எளனம் பண்ணமலும், ஸநாதனதர்மங்களுக்கு முறண்படாமலும் இருக்கும் மேலும் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் கூறியபடி (பிஷ்டபசுயாகத்தில் ஸாக்ஷாத் பசுஹிம்ஸையில்லாததால்) அஹிம்ஸையே பரமதர்மமென்றும்; ஸ்ரீமான் M. N. சுப்பிரமணியசாஸ்திரிகள் கூறியபடி யாகத்தை நாம் நிந்திக்காமல் வேதத்தின்கட்டளையை நாம் சிரஸாவஹித்ததுபோலும் எற்படும். ஆகவே பிஷ்டபசுவைக் கையாண்டு சுகம் பெறுவார்களாக!

சுபம்!

கும்பகோணம்
10–4–30.

M. ராமராவ்.
ஸமீரஸமயவீரீஸ் ஆசிரியர்.

குறிப்பு:— திருவிசைநல்லூர் இராமசுப்பாசாஸ்திரிகளும் பிஷ்டபசுவைச்சிலாஹித்து ஓர் நூலை எழுதியிருப்பதாக அறிகிறேன்.

குறிப்பு:— இவ்விஷயத்திற்கு ஸமாதானம் மேல்வரும். (ப—ர்.)

தீர்த்தாடனம் - க்ஷேத்ராடனம்.

சனாதனதர்மிகளுக்கு இந்த இரண்டும் முக்கியம். ஆனால் இப்பொழுது மிகவும் கவனமில்லாமல் நடத்தப்படுகிறது. இவ் விரண்டினாலும் மனுஷ்யனுடைய பாபங்கள் குறைகிறது. பெரிய பரிவ்ராஜகரான ஆதிசங்கராசாரியர் முதல் எல்லோரும் இதை அனுஷ்டித்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தமட்டிலும் இது கிரஹஸ்தாசிரமம் முடிகிற சமயத்தில் ஜனங்கள் நடத்தவேண்டியது. பால்யமானபுருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் இது அவசியமில்லை. அவர்கள் இல்லற ஒழுக்கங்களையே தங்கள் கிருஹத்தில் நடத்தவேண்டியது. இப்பொழுது ரயில் முதலான சௌகரியங்களினால் கையிலிருக்கும் பணத்தைச் செலவுசெய்து ஒருதரம் வடக்கேயிருந்து தென்தேசம் வரையிலும் சுற்றிவருகிறார்கள்.

பால்யமானவர்கள் முக்கியமாக ஸ்திரீகள் இப்படிபோய் வருவதில் அனேக அசௌகரியங்கள் இருக்கிறது. சாஸ்திரத்தில் கால் நடையாகத்தான் போகும்படி குறிப்பிட்டிருக்கிறது. மற்ற வாகனங்களில் ஏறிப்போனால் பயனில்லை. இதனால்தான் சமணர்கள் இப்பொழுதுகூட தங்கள் தீர்த்தயாத்திரைகளுக்கு கால்நடையாய் போகிறார்கள். ஆஸ்திகர்கள் இதைக்கவனித்து தீர்த்தாடனம் க்ஷேத்ராடனம் இவ்விரண்டையும் பற்றி தீர்க்க ஆலோசனை செய்து இக்காலத்திற்குத் தகுந்தபடி, முக்கியமான ஆலயங்கள், முக்கியமான தீர்த்தங்கள் இவைகளுக்கு எக்காலங்களில் போகவேண்டியது என்று யோசித்து தீர்மானம் செய்து பத்திரிகைகள் மூலமாகவும், பிரசாரகர்கள் மூலமாகவும் தெரிவிக்கவேண்டும். மேலும் இப்பொழுது தீர்த்தக்கரைகளிலும் க்ஷேத்திரங்களிலும், அனேக தீங்குகள் உண்டாயிருக்கின்றன. அவைகளைக் கவனித்து ஒழித்தாலொழிய ஜனங்கள் மிகவும் ஆபத்தில் படுவார்கள்.

கோவில் தர்மகர்த்தாக்களும் ஊரில் பெரிய அந்தஸ்து உடையவர்களும், நம்முடைய மதாசாரியாளும் இதைக்கவனித்து நம்முடைய பழைய வழக்கங்களை நமக்குப்புகட்டி ஈசுவரனுடைய கிருபைக்குப் பாத்திரமாக்கும்படி செய்ய ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

தேவபாஷை.

தேவபாஷையான சம்ஸ்கிருதத்தை ஆஸ்திகர்கள் எல்லோரும் படிக்கவேண்டுமென்று பத்திராதிபர் ஆர்யதர்மத்தில் எழுதினது மிகவும் உத்தமம். இப்பொழுது பள்ளிக்கூடங்கள், காலேஜ்கள் முதலியவைகள் எல்லாம் மூடி அனேகமாய் பையன்கள் தங்கள் கிராமங்களுக்கு வந்திருப்பார்கள். இப்பொழுது வீணாக நாட்களை செலவழிக்காமல் சம்ஸ்கிருதபாஷையில் கொஞ்சம் பயிர்ச்சியுள்ள பையன்கள் ஆங்காங்கு ஸம்ஸ்கிருத பண்டிதர்களிடமிருந்து காவ்யமோ, வேறு ஏதாவது நாடகமோ கற்றுக்கொள்ளலாம். காலம் போனால் மறுபடியும் வராது. பையன்களுடைய பெற்றோர்களும் மற்றும் ஆஸ்திக பக்தியுள்ளவர்களும் இதைக் கவனிப்பார்களாக.

எழுத்துக்கூட பழக்கமில்லாத பையன்களுக்கு இரண்டு மாதத்தில் எழுத்துக்களும்வாசிக்கவும் கற்றுக்கொடுத்துவிடலாம் அதிக சிரமம் கூட இல்லை. காலமே இரண்டுமணிநேரம் படித்தால் எழுதப்படிக்க வந்துவிடும்.

மேலும் இப்பொழுது நடக்கும் உபநயனங்கள் விவாகங்கள் மற்றும் சுபகார்யங்கள் நடக்கும் வேளையில் ஒவ்வொருகிருஹஸ்தர்களும் தேவபாஷையின் அபிவிருத்தியின் பொருட்டு இதுவரையிலும் படித்திருக்கும் சிரோமணி முதலான பட்டம் பெற்றவர்களுக்கும், தாராளமாக சம்பாவனை செய்தால் இகத்திற்கும், பரத்திற்கும் மிகவும் நன்றாயிருக்கும். கே. சுந்தரமய்யர்.

ஸ்ரீ ஜகத்குருமூர்த்தியின் உபன்யாஸச் சுருக்கம்.

अज्ञानतिमिरान्धस्य ज्ञानांजनशलाकया ।
चक्षुरुन्मीलितं येन तस्मै श्रीगुरवे नमः ॥

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசாரியாளும் அத்வைதஸித்தாந்த ஸார்வபௌமாளாயும் ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதிகளுமாகிய ஸ்ரீ ஜகத்குரு சங்காராசாரியமூர்த்திகள் சுக்லஹு மாசிமீ 22 தேதி ஸௌம்யவாஸரம் சுக்லபஞ்சமியன்று ஸ்ரீ பரமாசாரியாள் லோகோபகாரமாய் தர்மஸ்தாபனங்களின்பொருட்டு உற்பவமா

னது போல் பாஹு—நதிக்கரையில் அமையப்பெற்ற மண்டகுளத்தூர் கிராமத்திற்கு சிஷ்யர்களை அனுக்கிரஹிக்கும்பொருட்டு வேத பாராயண வாத்தியகோஷங்களுடன் விஜயம் செய்தார்கள். பிறகு காசி விச்வகலாசாலை மீமாம்ஸாபண்டிதரான அ. சின்னஸாமி சாஸ்திரிகளால் ஸ்ரீ குருமூர்த்தியின் வாலைப்பற்றி ஸம்ஸ்கிருதபத்ர மூலமாய் வாசிக்கப்பட்டது. அன்றயதினம் ராத்திரி ஸ்ரீ குருமூர்த்தியின் ஸ்வஸ்தானமாகிய ஸ்ரீ சங்கரநிலயத்தில் அனேகம் சிஷ்யவர்க்கங்களும் பக்தர்களுமுள்ள சபையில் ஸ்ரீருத்திராத்யாயஸாரமான 'शंभु' என்கிறது முதல் எட்டுவிதமான மந்த்ரங்களின் முதலில் வருகிற மந்த்ரங்கள் நான்கும் லோகத்திற்கு ஸுகத்தை உண்டுபண்ணக்கூடிய கைலாஸவாஸியான பரமேசுவரனுடைய மஹிமையென்றும் கூடி மந்த்ரங்களின் பின்னால்வரும் மந்த்ரங்கள் நான்கும் லோகத்திற்கு ஸுகத்தை உண்டுபண்ணக்கூடிய ஸ்ரீ சங்கரருடைய ஸ்தூலஸூக்ஷ்ம காரண துரீய மஹிமை என்றும் (ஜடாதாரியாயிருந்து) கொண்டு ஸ்ரீ சம்பு லோகங்களைரக்ஷித்தாரென்றும் கேசமில்லாமல் ஸந்யாஸாச்ரமியாயிருந்துகொண்டு சம்புவைக்காட்டிலும் சங்கரர் லோகங்களை ரக்ஷித்து தர்மங்களை நிலைநிறுத்தினதாகவும் இதே மேற்கூறிய 8-மந்திரங்களை ஸ்ரீ பரமேசுவரனுக்கும் ஸ்ரீ சங்கரருக்கும் கார்யரூபங்களாக பரஸ்பரம் உள்ள வித்தியாஸங்களைத் தெளிவாய் எடுத்துரைத்தும் தவிர ञयवं यजामहे என்கிற மந்த்ரத்தினால் யாவருக்கும்அனித்யமாயும் துக்ககரமாயும் உள்ளபதார்த்தத்தினிடத்தில் ஆசைகூடாது. அப்படி வைத்தால் அது மிகவும் துக்கஹேதுவாகும் என்றும் ஸம்ஸாரமென்னும் ம்ருதியிலிருந்து எல்லாரையும் மோகனம்பண்ணி வைக்கும் கருத்தை உடைத்தாயிருக்கிறதென்று ஸ்ரீ ருத்திராத்யாயத்தின் ஸாரத்தைத்தெரிவித்தும்தவிர ஸ்ரீபகவத்பாதஜயந்தி வைபவத்தை 11,12வருஷகாலமாகநடத்திவரும் மண்டகுளத்தூர் சங்கரஜயந்தியைப்போல் ப்ரயத்தினமன்னியில் நாடெங்கும் சங்கரஜயந்தியாகிய விசேஷ புண்யகால கொண்டாட்டத்தை புண்ணியோதயமாகவும் குடும்பக்ஷேமங்களுக்கு ஹேதுவாயும் சித்தசுத்தி த்வாரா மோக்ஷத்திற்கு ஹேதுவாயும் அவச்யம் அனுஷ்டிக்கவேண்டுமென்றும், ஸ்ரீ கைலாஸவாசியான சம்புவைக்காட்டிலும் லோகோபகார விஷயத்தில் சங்கரருடைய மஹிமையை பாலும் பழமும் போல் மிகவும் அத்புதமென்று ரொம்ப விஸ்தாரமாகவும்

மாதுர்யமாயும் உபதேசித்தார்கள். தர்மவிருத்தமான பால்ய விவாஹத்தடைச் சட்டத்திற்கு பயந்த பிராமணசமூஹங்களுக்கு வேதசாஸ்திரங்களை நம்பி பாரமார்த்திகமாய் முன்னோர்கள் ஸம்பிரதாயங்களை விடாமல் சாஸ்திரவிதிப்படியே விவாஹாதிகளை நடத்த வேண்டுமென்றும் சட்டயெதிர்ப்புக்காக சண்டைசெய்யவேண்டாமென்றும் நம்பிச்செய்தால் ஒருவித குறைவுமின்றிபாமேசுவா அனுக்ரஹத்தால் எல்லா சௌகர்யங்களும் உண்டாகுமென்றும் காராக்ரஹம் நேர்ந்தாலும் தர்மங்களை ஸ்தாபிப்பதின்பொருட்டு அனுபவிக்கத்தான் வேண்டுமென்றும் முக்கியமாக விதிதவராமல் அனுஷ்டிக்கவேண்டுமென்றும் ஸம்ஸாரஸாகரத்தினின்று விடுபட அநேக வழிகளுடனும் அமிர்தமயமாக உபந்யசித்தார்கள், பிறகு பண்டித ஸம்மானம் நடைபெற்று அழகாக ராத்திரி ஸ்ரீகுருமூர்த்தியின் வீதிவல உத்ஸவமும் சிறப்பாக நடைபெற்றது.

ஓர் வேண்டுகோள்.

ஆஸ்திகஸஹோதரர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.—

5-3-30 மண்டகுளத்தூரில் நம்முடைய குருமூர்த்திகள் உபன்யஸித்த வாக்யோல்லங்கனமில்லாமல் நாம் மேன்மேலும் சிரேயஸ்ஸை அடையும்பொருட்டு நம்முடைய மதஸ்தாபனரும் லோகாசாரியாளுமான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாளின் ஜயந்தி வைபவத்தை மஹா ஆனந்தகாமாயும் பிரீதியையும் உண்டுபண்ணக் கூடியதுமாகிய பிரமோத ஸம்வத்ஸரத்திலேயே ஒவ்வொரு பிராமணோத்தமர்களும் தங்கள் தங்கள் கிருஹங்களில் ஸ்ரீ ராம நவமி கிருஷ்ணாஷ்டமி முதலியது அனுஷ்டிப்பதுபோல் நம் பரமாசாரியாளின் பூஜை அர்ச்சனை பாராயணம் உத்ஸவம் பிராம்மணஸமாராதனை இவைகளை அவசியம் அனுஷ்டிக்க ஆரம்பித்து வருஷப் பிரதிவருஷம் இந்த ஜயந்தி வைபவத்தை அபிவிருத்தியாக்கி ஐஹிகாமுஷ்மிக சித்திகளுடன் ஸ்ரீமத் ஆசார்ய கிருபைக்கு பாத்திராளாகும்படி கோருகிறேன்.

ஆசார்ய அந்தரங்கபக்தன் ம. சு. ஸ்ரீநிவாசன்,

மண்டகுளத்தூர் (போளூர்தாலூகா)